பக்கங்கள் - 12

விலை - ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 220

சனிக்கிழமை
04 ஜூலை 2026

ஆனி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057



உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.





## லலித், குகன் வழக்குகள் ஓகஸ்ட்டுக்கு ஒத்திவைப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 4
யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான லலித், குகன் ஆகியோர் தொடர்பான வழக்கு ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு

»11

# இனவழிப்புக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு உதவுக

### தமிழக முதல்வர் விஜயைச் சந்தித்து தமிழ்த் தேசியப் பேரவையினர் கோரிக்கை

சென்னை, ஜூலை 4

ஈழத்தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைகளுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு தமிழகம் முன்னிற்க வேண்டும் என்று தமிழக முதல்வர் விஜயிடம் தமிழ்த் தேசியப் பேரவையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

»11

## ரூ.100 கோடி லஞ்சம் வாங்கினாரா மஹிந்த?

### விசாரணை மீள ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 4
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு சிங்கப்பூரில் வதியும் தமிழரான சிதம்பரம் என்பவர் ஐந்து மில்லியன் டொலர் (இலங்கை ரூபாவின் மதிப்பில் 100 கோடி ரூபா) இலஞ்சமாக வழங்கிய குற்றச்

»11

## எரிவாயு விலை ரூ.300 குறைப்பு

கொழும்பு, ஜூலை 4
லிட்ரோ எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்படுவதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

»11

### இராணுவத்தின் தேவைக்காக

## காணிகளைச் சுவீகரிப்பதற்கு ஒருபோதும் அனுமதியில்லை

### பச்சிலைப்பள்ளித் தவிசாளர் உறுதி

கிளிநொச்சி, ஜூலை 4
கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இராணுவத்தின் தேவைக்காக காணிகளைச் சுவீகரிப்பதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தவிசாளர் சுப்பிர

»11

### முன்னாள் கடற்படைத் தளபதி

## வசந்த கரன்னகொட நேற்றுக் கைதானார்!

கொழும்பு, ஜூலை 4
கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னகொட, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின்

»11

## மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

### பிரதான எதிர்க்கட்சி அழுத்தம்

கொழும்பு, ஜூலை 4
வடமாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்

»11

## 70 வீதமான கைதிகள் போதைக்கு அடிமை!

கொழும்பு, ஜூலை 4
நாட்டிலுள்ள கைதிகளில் 70 வீதமானவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என்று அதிர்ச்சித் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. போதைப்பொருள் அச்சுறுத்தலை இல்லாதொழிப்பதற்கான 'முழு

»11

### வவுனியா மாநகரமுதல்வர் பதவி நீக்கம்

## ஆளுநரின் வர்த்தமானிக்கு இடைக்காலத் தடைவிதிப்பு

வவுனியா, ஜூலை 4
வவுனியா மாநகர முதல்வர் காண்டீபனை பதவிநீக்கம் செய்து ஆளுநர் பிறப்பித்த வர்த்தமானி அறிவிப்புக்கு வவுனியா மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடைவிதித்து நடவடிக்கை எடுத்துள்ளது. ஆளுநரின் முடிவைச் சவாலுக்கு உட்படுத்தி வவுனியா மாநகர முதல்

»11




### சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர்

## கிஷோரின் நீக்கத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 4
சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் கிஷோரைப் பதவி நீக்கம் செய்து ஆளுநர் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.
சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் கிஷோரால் வடமாகாண ஆளுநர்,

»11

## போதிய கோரமின்மையால் சபை நேற்று ஒத்திவைப்பு

### சாவகச்சேரி நகரசபையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
சாவகச்சேரி நகரசபையின் விசேட கூட்டம் போதிய கோரமின்மை காரணமாக திகதி குறிப்பிடப்படாமல் நேற்று ஒத்திவைக்கப்பட்டது.

»11

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

04.07.2026 சனிக்கிழமை

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 03.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4479 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 14 32 38 75 |
| விசேட எழுத்து | A |

**ஹந்தஹஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 03.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1546 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 22 33 53 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 03.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0505 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 6 0 6 6 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 03.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2585 |
| ஆங்கில எழுத்து | N |
| சுப்பர் இலக்கம் | 06 |
| வெற்றி இலக்கங்கள் | 57 58 70 78 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 03.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6237 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 0 1 1 8 4 4 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 03.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2267 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 26 37 43 58 |
| விசேட எழுத்து | I |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 03.07.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0353 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 24 59 |

# இழுவைமடித் தொழிலைத் தடுக்காவிடில் வடக்கின் கடல் வளத்துக்குப் பேராபத்து!

### மீனவப் பிரதிநிதிகள எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 4**

**வடக்குக் கடற்பரப்பில் உள்ளூர் இழுவைமடித் தொழில் அதிகரித்துள்ளது. அபாயமான இந்தத்தொழில் முறையைத் தடுக்காவிடில், வடக்கின் கடல் வளம் முற்றிலும் அழிவடையும் என்று வடக்கு மாகாண கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதிநிதி நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அண்மையில் வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் நடத்திய கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சரும் பங்குபற்றியிருந்தார். அங்கு உள்ளூர் இழுவைமடித் தொழிலை எப்போது தடை செய்வீர்கள் என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அமைச்சர் உள்ளூர் இழுவைமடித் தொழில் மென்மையான தொழில், அதனைத் தடை செய்யவேண்டிய தேவை இப்போதைக்கு இல்லை என்ற கருத்துடன் பதிலளித்திருந்தார்.

2017ஆம் ஆண்டு உள்ளூர் இழுவைமடித் தடை தொடர்பான சட்டம் வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டது. ஆனால் அந்தச் சட்டம் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

உள்ளூர் இழுவைமடித் தொழிலால் நிலமட்டத்திலிருந்து கீழாக ஒரு அடி ஆழத்தில் கடல்வளம் தோண்டப்படுகின்றது.

இதனால் மீன்வசிப்பிடங்கள், உற்பத்தியிடங்கள்என்பனமுற்றுமுழுதாக இல்லாமல் போகின்றன. திட்டமிட்ட முறையிலேயே எமது கடல் வளங்கள் முற்றுமுழுதாக அழிக்கப்படுகின்றன.

சட்டவிரோதமான தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டமையால் தான் கடலில் மீன்பிடி முற்றுமுழுதாக இன்று இல்லாமல் போயுள்ளது.

வடமராட்சி கிழக்கில் அதிகளவான சுருக்குவலைத் தொழில்கள் இடம்பெற்று வருகின்றன. எனவே எமது கடல்வளத்தைப் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இதனைத் தடுப்பதற்காக அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (க)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 03.07.2026 | வெள்ளிக்கிழமை | 0945 | D | 6 9 5 9 7 0 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 03.07.2026 | வெள்ளிக்கிழமை | 3211 | X | 08 37 44 66 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 03.07.2026 | வெள்ளிக்கிழமை | N | 07 13 15 62 | 5372 |

**SASIRI**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 03.07.2026 | வெள்ளிக்கிழமை | 1041 | 04 16 19 |

**லக்ன ராசி**


| திகதி | தினம் | மேஷம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 03.07.2026 | வெள்ளிக்கிழமை | | 03 05 37 48 | 4923 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 03.07.2026 | வெள்ளிக்கிழமை | I | 13 | 07 13 17 72 | 2387 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 03.07.2026 | வெள்ளிக்கிழமை | D | 02 06 60 73 | 3037 |



## மென்பானங்களின் நிறக் குறியீட்டில் திருத்தம்

### வர்த்தமானி வெளியீடு

**கொழும்பு, ஜூலை 4**

சீனி அடங்கிய திரவ உணவுகளுக்கான வர்ணக் குறியீட்டு உத்தரவுகளைத் திருத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸவால் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

புதிய திருத்தங்களின்படி, சீனி அடங்கிய திரவ உணவுகளின் பைக்கற்றுகளின் மீது காட்சிப்படுத்தப்பட வேண்டிய சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை வர்ண குறியீட்டு இலச்சினைகளின் வடிவமைப்பு மற்றும் காட்சிப்படுத்தும் முறை குறித்த புதிய விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், கண்ணாடிப் போத்தல்களில் இடவசதி குறைவாக உள்ள சந்தர்ப்பங்களில் பயன்படுத்தக் கூடிய மாற்று இலச்சினை ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய 100 மில்லிலீற்றரில் 8.0 கிராமுக்கு அதிக சீனி கொண்ட பானங்களுக்கு சிவப்பு வர்ணமும், 2.5 கிராம் முதல் 8.0 கிராம் வரையான பானங்களுக்கு மஞ்சள் வர்ணமும், 2.5 கிராமுக்குக் குறைவான சீனி கொண்ட பானங்களுக்கு பச்சை வர்ணமும் பயன்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## களனி பல்கலைக்கழக வேந்தராக ஆனந்ததேரர்

**கொழும்பு, ஜூலை 4**

களனி பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக நாரம்பனாவே ஆனந்த தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவால், ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் நாரம்பனாவே ஆனந்த தேரரிடம் கையளிக்கப்பட்டது. (ச-இ)

## வவுனியா மேயர் பதவிநீக்கம் ஜனநாயக விரோதமானது!

### மட்டக்களப்பு மாநகரசபையில் கண்டனம்

**மட்டக்களப்பு, ஜூலை 4**

வடக்கு மாகாண ஆளுநரால் வவுனியா மாநகரசபை முதல்வர், தன்னிச்சையாகப் பதவிநீக்கம் செய்யப்பட்டமை, மக்களுக்கு வழங்கப்பட்ட ஜனநாயக உரிமையை மீறும் செயல் எனக் கூறி மட்டக்களப்பு மாநகரசபையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற போதே இந்தக் கண்டனம் வெளியிடப்பட்டது.

சபையின் விவாதங்களின் போது கருத்துத் தெரிவித்த மாநகர சபை உறுப்பினர் தயாளகௌரி, மக்களின் ஜனநாயக வாக்களிப்பினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு உறுப்பினராகவும், மாநகர சபை உறுப்பினர்களினால் முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட ஒரு முதல்வராகவும் அவர் பதவி வகித்தார். இவ்வாறான நிலையில், அவரைப் பதவி நீக்கம் செய்ய வட மாகாண ஆளுநர் எடுத்த நடவடிக்கை அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயற்பாடாகும். உள்ளூராட்சி மன்றங்களின் தன்னாதிக்கத்தை கேள்விக்குள்ளாக்கும் இத்தகைய செயல்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது- என்றார்.

இதற்கு ஏனைய உறுப்பினர்களும் ஏகமனதாக ஆதரவு தெரிவித்து கண்டனம் வெளியிட்டனர். (ச-இ)

## முதியோர் இல்லங்களை பதிவுசெய்ய காலஅவகாசம்

**கொழும்பு, ஜூலை 4**

இலங்கையில் பதிவு செய்யப்படாமல் இயங்கிவரும் அனைத்து முதியோர் இல்லங்களும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் தங்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று தேசிய முதியோர் செயலகத்தின் பணிப்பாளர் கே.சதுர மிகிதும்ப தெரிவித்துள்ளார்.


தற்போது நாடு முழுவதும் உள்ள முதியோர் பராமரிப்பு நிலையங்கள் குறித்து விசேட கணக்கெடுப்பு ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது. அதன்மூலம் நாடு முழுவதும் பதிவு செய்யப்படாமல் இயங்கிவரும் முதியோர் பராமரிப்பு நிலையங்களை இனங்கண்டு அவற்றின் அடிப்படைத் தகவல்களைப் பெற்றுகொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை காலமும் தகவல்களை வழங்காமல் முதியோர் இல்லங்களை நடத்தி வருபவர்கள் எமது செயலகத்தால் வழங்கப்பட்டுள்ள கூகுள் படிவத்தை பூர்த்தி செய்து விவரங்களை உடனடியாக வழங்கமுடியும். இதனால் எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படவுள்ள விசேட நலத்திட்டங்களில் இணைத்துக் கொள்வதற்கு இந்தப் பதிவுகள் அவசியமானதாகும். அதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது இல்லங்களை பதிவு செய்யத் தவறும் பட்சத்தில் அந்த நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 07 . 1948



மறைவு
02 . 07 . 2026

# கந்தையா கருணாநந்தமூர்த்தி

## (கொழும்பு எசன்ஸ் ஹவுஸ் உரிமையாளரின் தந்தை)

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, கொழும்பு (பெற்றா), யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொக்குவிலை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கருணாநந்தமூர்த்தி அவர்கள் கடந்த (02.07.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைராசா - ஞானசக்தி தம்பதியரின் மருமகனும், யோகராணி அவர்களின் அன்புக் கணவரும், வசந்தன் (கனடா), சுகந்தன் (கொழும்பு எசன்ஸ் ஹவுஸ்), மதிவதனன் (கனடா), ரோஹிணி (கனடா), சுஜீவன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவானி (கனடா), தீபா (யாழ்ப்பாணம்), கவிதா (கனடா), சடகோபன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், தையல்நாயகி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, இராசலட்சுமி மற்றும் பாலசுப்பிரமணியம், சிறிமுருகதாஸ் (அமெரிக்கா), விமலநாயகி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், றோஜன், ஹர்ஷா, சன்ஷிகா, கவின், கவிஷா, அனிக்கா, லவிக்கா, ஹஷிக்கா, மேவன், கஜின், பவின், ஹஸ்மி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

86/8, சம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தொடர்புகளுக்கு: 077 9128 630
077 4323 832
021 2052 472

தகவல்:
குடும்பத்தினர்

(Cs/61789)N -1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

**கடகம்:** குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பல முறை யோசித்து எடுப்பது நல்லது.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** சுஎதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் அதற்கேற்ப பணவரவும் இருப்பதால் பிரச்சினை எதுவும் இருக்காது.எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**துலாம்:** பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு உங்கள் மன அமைதியைப் பாதிக்க வாய்ப்பு உள்ளது என்பதால் அவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**தனுசு:** வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** கணவன்-மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு குறையும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

# நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் பாரம்பரிய விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 4

நல்லூர் சங்கிலியன் மன்றம் சனசமூக நிலையத்தின் 81ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் பாரம்பரிய விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறும். நிலையத் தலைவர் வி.ஜனகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக சங்கிலியன் மன்றத்தின் மூத்த உறுப்பினர் அ.மனோகரனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகரசபையின் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உதயசீலன், யாழ். மாநகரசபையின் பொதுசன தொடர்பு அதிகாரி எஸ்.லோகசிங்கம், நயினாதீவு கணேச வித்தியாலய ஆசிரியர் அ.அங்கரரூபன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக சங்கிலியன் மன்ற போதனாசிரியை திருமதி க.பிரியதர்சினியும் கலந்துகொள்வர். நிகழ்வின் இறுதியில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கலும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (க)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 4


பண்ணாகம் அண்ணா கலை மன்ற சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மன்றப் பணிமனையில் நடைபெறும். மன்றத் தலைவர் ப.அஜித்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், மன்றத்தின் மூத்த உறுப்பினர் இ.க.கிருஷ்ணமூர்த்தி, திருமதி சர்வாஜினிதேவி ஆகியோர் கலந்துகொள்வர். (க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை





## பொய்யாமொழி

**விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்**


**பொருள்:** யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால், ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது வேறொன்றும் இல்லை.

# போதையைத் தோற்கடிக்க...!

**போ**தைப்பொருள் பழக்கத்திலிருந்து மீண்டு மறுவாழ்வு பெற்றுள்ள பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றது திசைகாட்டி அரசாங்கம். கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் அமைச்சு சார் செயற்றிட்டமாக இதை முன்னெடுக்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்குவந்த காலப்பகுதியில் இருந்து போதைக்கு எதிராகப் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நீண்ட திட்டங்களின் ஓர் உச்சப் பாய்ச்சலாகவே போதைப்பொருளில் இருந்து மீண்டு மறுவாழ்வு பெற்றவர்களுக்கான வேலைவாய்ப்பு விடயம் அணுகப்பட வேண்டும். அவ்வாறு அணுகுவதே பொருத்தமாகவும் இருக்கும்.

போதைப்பொருளுக்கு எதிரான செயற்றிட்டம் என்பது வெறுமனே கைது நடவடிக்கையோ, தேடுதலோ, நீதிமன்ற வழக்குகளோ அல்ல. மறுவாழ்வுத் திட்டங்கள் எவ்வளவுதூரம் நேர்த்தியாக முன்கொண்டு செல்லப்படுகின்றனவோ அதுவே போதைப்பொருளுக்கு எதிரான உண்மையான மீளெழுச்சி. போதைக்கு ஆட்பட்டு அதிலிருந்து மீண்டவர்களை 'கௌரவமான முறையில்' சமூகமயப்படுத்தினால் மட்டுமே ஒரே நாடாக நாம் வெற்றிபெற முடியும். ஆதலால், அத்தகைய சிந்தனையின் பாற்பட்டு நடைமுறைக்கு வந்திருக்கும் இந்த வேலைவாய்ப்புத் திட்டத்தை எவ்வளவுதூரம் பாராட்டினாலும் அது தகும். அதேநேரம் வேலைவாய்ப்பு வழங்குவதுடன் மட்டுப்படுத்த வேண்டிய விடயம் இதுவல்ல. இதற்கு அப்பாலும் பல்வேறு பொறுப்புகளும், தார்மீகப் பொறுப்புகளும் அரசாங்கத்துக்கு இருக்கவே செய்கின்றன.

போதைப்பொருள் சார்ந்த குற்றங்களுக்காக மறுவாழ்வுக்கு உட்படுவோர் அல்லது சிறைசென்று திரும்புவோர் மீண்டும் மீண்டும் அதே குற்றங்களுக்கு ஆட்படுகின்றனர் என்பது பிரதேச - மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் துறைசார் அதிகாரிகள் முன்வைக்கும் பூதாகரமான குற்றச்சாட்டாகக் காணப்படுகின்றது. ஆபத்தின் அறைகூவலாக அமைந்துவரும் இந்தக் கருத்துகள் தொடர்பில் அரசாங்கம் கூடுதலான அவதானம் செலுத்த வேண்டும். மறுவாழ்வுக்கு ஒருவர் சென்றுவந்தாலும், அவருக்கு மீண்டும் போதைப்பொருள் கிடைப்பதற்கு ஏதுவான அணுகல் சமூகத்தில் உயிர்ப்புடன் இருக்கும்போது மறுவாழ்வு நடவடிக்கை எவ்வளவு தூரம் வெற்றிபெறும் என்பது சந்தேகத்துக்குரிய விடயமே. இதிலுள்ள ஆழமான தாக்கம் புரிந்துகொள்வதற்குச் சிரமமான விடயம் அல்ல. எனவே, போதைப் பொருள்களை மீட்பது டன் அவை தொடர்பான அணுகலையும், பரவல் வேகத்தையும் தகர்ப்பதற்கு பரந்துபட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு மிகத் தீவிரமான புலன் விசாரணைகள் அவசியம்.யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழர் தாயகப் பகுதிகள் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொர்க்கபுரியாக மாற்றம்பெற்று நெடுங்காலம் ஆகிவிட்டது. சட்டங்கள் இறுக்கப்படுகின்ற போதிலும், தண்டனைகள் கடுமையாகின்ற போதிலும் மட்டுமே, இந்தப் போதைச் சீரழிவைச் சரிசெய்ய முடியும். ஆதலால்,. போதையைத் தோற்கடிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துவரும் நம்பிக்கையான திட்டங்கள் மேலும் தொடரட்டும்.




# சிறந்த சுற்றுலாத்தலம் இலங்கைக்கு முதலிடம்



**கொழும்பு, ஜூலை 4**
**2026 ஆம் ஆண்டுக்கான உலகின் சிறந்த தீவுகளுக்காக சுற்றுலாத் தலங்களின் தரவரிசையில் இலங்கை முதலிடத்தைப் பெற்றுள்ளது.**

சர்வதேச சுற்றுலா ஊடகமான 'பிக் 7 டிராவல்' நடத்திய அண்மைக் கால மதிப்பீட்டின்படி, இயற்கை அழகு, பல்லுயிர்ப் பெருக்கம், கலாசாரப் பாரம்பரியம், சுற்றுலா அனுபவங்கள் மற்றும் உலகளாவிய பிரபலம் உள்ளிட்ட பல காரணிகளின் அடிப்படையில் இந்த தரவரிசைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய, உலகின் முன்னணி தீவு சுற்றுலாத் தளங்களாக நீண்ட காலமாகக் கருதப்பட்டு வந்த கிரீஸ், போர்த்துக்கல், அயர்லாந்து மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளைப் பின்தள்ளி இலங்கை முதலிடத்தைப் பிடித்துள்ளமை சிறப்பம்சமாகும்.

அத்துடன், இயற்கைச் சூழல், கலாசாரம், வனவிலங்கு அனுபவங்கள் மற்றும் இலகுவான போக்குவரத்து வசதிகள் போன்றவற்றை ஒரே சுற்றுப்பயணத்தில் அனுபவிக்கக்கூடிய சுற்றுலாத்தலங்கள் மீது சுற்றுலாப் பயணிகளின் கவனம் அதிகரித்துள்ள நிலையில், இலங்கை உலகின் தீவு சுற்றுலாத்துறையின் புதியதொரு மைல்கல்லாக மாறிவருவதாகவும் அந்த மதிப்பீட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச-44)

# முதியோர் கொடுப்பனவு விநியோகம்

கொழும்பு, ஜூலை 4
'அஸ்வெசும' நலன்புரிக் கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ், ஜூன் மாதத்துக்கான முதியோர் கொடுப்பனவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, முதலாம் கட்டத்தின்கீழ் 70 வயதுக்கு மேற்பட்ட 621,761 முதியோர்களுக்கான பணம் பயனாளர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டத்தின்கீழ் 70 வயதுக்கு மேற்பட்ட 76,139 முதியோர்களுக்கான பணம் அவர்களது அஸ்வெசும வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# இணையவழி பணமோசடி ஒருவர் கைது!



கொழும்பு, ஜூலை 4
இணையவழி ஊடாக தொழில் செய்து பணம் சம்பாதிக்க முடியும் எனக் கூறி, பணமோசடி செய்த சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வடமேல் மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் பேஸ்புக் மற்றும் டெலிகிராம் சமூக வலைத்தளங்கள் ஊடாக தொடர்புகளை ஏற்படுத்தி இந்த மோசடியைச் செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் 43 இலட்சத்து 86 ஆயிம் ரூபாவை மோசடி செய்துள்ளதுடன், அந்தப் பணத்தில் இருந்து 5 இலட்சம் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்டவர் 23 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச-இ)

# யோஷிதவின் சீராய்வு மனு தள்ளுபடி

கொழும்பு, ஜூலை 4
தனக்கெதிரான நிதித்தூய்தாக்கல் வழக்கின் சதித் திட்டக் குற்றச்சாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாது என தீர்ப்பளிக்கக் கோரி யோஷித ராஜபக்ச சமர்ப்பித்த மறுசீராய்வு மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

யோஷித ராஜபக்சவால் சமர்ப்பிக்கப்பட்ட சீராய்வு மனு மீதான தீர்மானம் நேற்று அறிவிக்கப்பட்ட போதே, நீதிமன்றம் இவ்வாறு அறிவித்துள்ளது. இந்த மனு மீதான விசாரணை நீதியரசர்களான அமல் ரணராஜா மற்றும் கலாநிதி சுமுது பிரேமச்சந்திர ஆகியோரைக் கொண்ட மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. (எ-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை-ஆனி 20
05.07.2026
சுபநேரம் : 04.26 – 05.56
ராகுகாலம் : 11.56 – 01.26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# போதைக்கு அடிமையாவோரைக் கண்காணிப்பதற்குக் கருவி

**கொழும்பு, ஜூலை 4**

**பிள்ளைகள் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு அடிமையாகியுள்ளார்களா? என்பதைப் பெற்றோர் தங்களின் வீடுகளிலேயே தனிப்பட்ட முறையில் பரிசோதித்துப் பார்ப்பதற்கான விசேட சோதனைப் பொதிகளை, மருந்தகங்கள் மூலம் கொள்வனவு செய்யக்கூடிய வகையில் சந்தைக்கு அறிமுகப்படுத்துவது குறித்து அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது.**

நச்சுப் போதைப்பொருள் பேரழிவை நாட்டிலிருந்து முற்றாக ஒழிப்பதற்காகச் செயற்படுத்தப்படும் 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டுச் சபையின் விசேட கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தில் அதிநவீன வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் அறிக்கைகளை மிக விரைவாகப் பெற்றுக்கொள்வதற்காக நவீன தொழில்நுட்ப முறைகளைக் கையாளுவது குறித்து ஆராயப்பட்டது. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை முறையாகப் புனர்வாழ்வளிப்பதற்கான புதிய சட்டவரைவு தற்போது தயாரிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளதுடன், அதனை மிக விரைவில் வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ச-இ)

## ஈ-பொருளாதாரக் கணக்கெடுப்பு நாட்டில் முதல்முறை ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 4

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தினால் 2025/2026ஆம் ஆண்டுகளுக்குரிய இலங்கையின் முதலாவது ஈ -பொருளாதாரக் கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

நாட்டின் விவசாயம் சாரா பொருளாதார நடவடிக்கைகள் குறித்த அண்மைக்கால மற்றும் நம்பகமான புள்ளிவிபரத் தகவல்களைத் திரட்டுவதே இந்தத் தேசிய வேலைத்திட்டத்தின் முதன்மை நோக்கம்.

தரவுகளின் அடிப்படையிலான பொருளாதாரத் திட்டமிடலுக்கு வலுவானதொரு அடித்தளத்தை வழங்கும் இந்தத் தொகைமதிப்பு, நாட்டில் தற்போதுள்ள அனைத்துக் கைத்தொழில், நிர்மாணம், வர்த்தகம் மற்றும் சேவைத்துளறைகளை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்படுகின்றது. இந்தத் தொகைமதிப்பின் முதற்கட்டமாக, 50 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட பெரிய அளவிலான நிறுவனங்களின் தகவல்களைச் சேகரிக்கும் பணிகள் இம்மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-இ)



## ஈரானுக்குப் புதிய தூதுவர் நியமனம்

ஈரானுக்கான இலங்கையின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் பஸீஹா அஸ்மி ஜூன் கடந்த 30ஆம் திகதி தெஹ்ரானிலுள்ள உள்ள இலங்கைத் தூதரகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். ஈரானுக்கான தூதுவர் பதவியைப் பொறுப்பேற்பதற்கு முன்னர், அவர் பல வருடங்களாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். (ச-44)



## அம்பாந்தோட்டை மாநகரசபை பிரதி மேயர் கைது

கொழும்பு, ஜூலை 4

அம்பாந்தோட்டை மாநகரசபையின் பிரதி மேயர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 9ஆம் திகதி அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

## 6 படுகொலை விவகாரம் இனியபாரதிக்கு மறியல்!

கொழும்பு, ஜூலை 4

திருக்கோவில் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் உள்ளிட்ட 6 மனிதப் படுகொலைகள் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு, ஒரு வருடமாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த 'இனியபாரதி' என அழைக்கப்படும் கே. புஷ்பகுமாரை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான இனியபாரதி மற்றும் அவரது சகாவான சசிதரன் தவசீலன் ஆகியோரே இவ்வாறு மட்டக்களப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். கடந்த 2007 ஜூன் 28 அன்று திருக்கோவில் பிர்தேச சபைத் தவிசாளர் உதயகுமார் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். கடந்த காலங்களில் கிடப்பில் போடப்பட்டிருந்த இந்த விசாரணை, 2025ஆம் ஆண்டு உதயகுமாரின் மனைவி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் செய்த மறுமுறைப்பாட்டை அடுத்து மீண்டும் விசாரணைக்குட்படுத்தப்பட்டது.

அதற்கமைய, கடந்த 2025 ஜூலை 6ஆம் திகதி சி.ஐ.டி. யினரால் இந்த இருவரும் கைதுசெய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஓராண்டு காலமாகத் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## கதவைத் தட்டிற கர்மா!

'கர்மா ஒரு பூமராங்' மாதிரி. அது எப்பிடியும் ஏதோ ஒரு ரூபத்தில பாவத்துக்கான பரிசைக் குடுக்காமல் விடாது. முந்தி நேவிக் கொமாண்டரா இருந்த வசந்த கரன்னகொடவை நேற்று லஞ்ச ஊழல் ஆணைக்குழு அரஸ்ட் பண்ணியிருக்குது. ஆளுக்கு இப்ப 73 வயது. இந்தத் தள்ளாத வயதில என்னத்துக்கு ஆளை அரஸ்ட் பண்ணினவை எண்டு யோசிப்பீங்கள். வேறயொண்டுமில்லை, உவர் மஹிந்தவின்ர கடைக்குட்டி யோசிதவை நேவியில சேர்க்கிறதுக்கு சில தகிடுதத்தங்கள் செய்தவர் எண்ட குற்றச்சாட்டிலதான் கரன்னகொடவைப் பிடிச்சிருக்கினம். நேவியில சேருறதுக்கு எண்டு சில தகுதியள் இருக்கு. ஆனால் அதொண்டும் யோசிதவுக்கு இல்லை. அதால யோசிதவுக்காக, அந்த ரூல்ஸையெல்லாம் தூக்கி எறிஞ்சு போட்டு, கொல்லைப் புறத்தால அவரை நேவிக்குள்ள கொண்டந்திருக்கினம். அதோட நிக்கேலை. சாதாரண நேவிக்காரரா அவரை வைச்சிருக்காமல், மேல்மட்டத்தில இருக்கிற மாதிரி பதவியெல்லாம் குடுத்து, பிரிட்டனுக்கு சனத்தின்ர காசில படிக்க அனுப்பி, பயிற்சியும் குடுத்திருக்கினம். இவ்வளத்துக்கும் பிளான் போட்டுக் குடுத்தவர் கரன்னகொட தான். 'காலம் முழுக்க மஹிந்த குடும்பம் தான் நாட்டை ஆளப்போகுது. ஒரு கொம்பனாலையும் என்னை ஒண்டும் செய்யேலாது' எண்ட மமதையில ஆடாத ஆட்டமெல்லாம் போட்டு, இப்பிடிக் கள்ளாட்டம் ஆடி யோசிதவை நேவியாக்கி அழகுபார்த்தவருக்கு இண்டைக்குக் காலம் கைவிலங்கு போட்டிருக்குது. இதில எங்க கர்மா வேலை செய்தது எண்டுதானே யோசிக்கிறீங்கள்?


கரன்னகொட மாட்டுப்பட்டது வெறும் யோசிதவின்ர ஊழல் விசயத்தால மட்டுமில்லை. இதுக்குப் பின்னால 11 தமிழ்ப்பெடியளைப் பெத்தவையின்ர கண்ணீரும் சாபமும் கிடக்கு. 2008, 2009 காலப்பகுதியில கொழும்பில வச்சுக் காசு பறிக்கிற நோக்கத்தோட, நல்ல பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்த 11 அப்பாவிப் பெடியளை நேவிக்காரர் கடத்திக் கொண்டுபோய், திருகோணமலை நிலத்தடிச் சிறைக்குள்ள அடைச்சு வைச்சிருந்திட்டு, பிறகு சாக்கொண்டு போட்டினம். அந்த ஈனவேலையைச் செய்விச்சது இதே கரன்னகொடவும் அவருக்கு கீழ வேலை செய்த நேவியாக்களும் தான் எண்டது உலகத்துக்கே தெரியும். எண்டாலும் "நாங்கள் அந்தப் பெடியளைப் பிடிக்கேலை" எண்டு கரன்னகொடவும், நேவிக்காரரும் கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்யாத குறையாச் சொன்னவை. உந்தப் படுகொலையை அடிப்படியா வைச்சு 'நேவி 11' எண்ட வழக்கும் நடந்தது. என்னதான் வழக்குப் போட்டாலும் , பரமசிவன் கழுத்தில பாம்பா இருந்தா ஒரு பிரச்சினையுமில்லைத்தானே. அதுதான் கரன்னகொட விசயத்திலையும் நடந்தது. 2021ஆம் ஆண்டு, இந்த வழக்கில கரன்னொடவுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை சட்டமா அதிபர் கைவாங்கிட்டார். அதால இவரை நீதிமன்றமும் விடுவிச்சிட்டுது. பிறகு திசைகாட்டி அரசாங்கம் வந்த பிறகு திரும்ப அந்தக் கேஸைத் தூசு தட்டி உயர்நீதிமன்றத்தில மறுவிசாரணை தொடங்கினாலும், கரன்னகொட வெளியால மைனர்மாதிரி சுதியாச் சுத்திக்கொண்டுதான் திரிஞ்சவர்.

ஆனால் கர்மா எல்லாத்தையும் கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக்கொண்டிருக்காது தானே. யோசிதவுக்குப் போட்ட வலையில எக்குத்தப்பா மாட்டியிருக்கிறார் கரன்னகொட. கரன்னகொடவை விசாரிச்சால் இன்னும் நிறையத் திருகுதாளங்கள் வெளியில வருமெண்டது திசைகாட்டிக்காரருக்கு விளங்கிட்டுது. அதாலதான் கோழியை அமுக்கிற மாதிரி ஆளை அப்பிப் பிடிச்சிட்டாங்கள். கடத்தல், கப்பம் கேட்டது எண்ட பாரதூரமான கேஸ்களில சிக்காத கரன்னகொட, இப்பிடி மஹிந்தவின்ர மகனைப் பின்வாசலால நேவிக்குள்ள கொண்டந்த விசயத்தில மாட்டுப்படுவாரெண்டு ஆருமே நினைக்கேலை. கரன்னகொட கூட நினைச்சுப் பார்த்திருக்க மாட்டார். அதிகாரத்தைக் காட்டிச் சட்டத்தில இருந்து தற்காலிகமாத் தப்பலாம், ஆனா கர்மாவின்ர கணக்குப் புத்தகத்தில இருந்து எவனும் தப்ப ஏலாது. ஆள் முந்திச் செய்த பாவங்கள் எல்லாம் இண்டைக்கு ஊழல் வழக்கு வடிவத்தில வந்து கரன்னாகொடவின்ர கதவைத் தட்டியிருக்கு. இன்னும் எத்தினை பேரின்ர கதவைத் தட்ட கர்மா காத்திருக்கோ தெரியேலை.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17 . 07 . 1942

மறைவு
04 . 07 . 2025

## சண்முகம் ராசம்மா

ஓராண்டு ஆனாலும்
உன் நினைவுகள் மட்டும்
நேற்றைப் போலவே நெஞ்சில் வாழ்கின்றன அம்மா...

உன் அன்பான குரல்,
உன் அரவணைக்கும் கரங்கள்,
உன் சிரிப்பு –
என் வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் ஒலிக்கிறது.

நீ இல்லாத வீடு வெறுமையாக இருக்கலாம்,
ஆனால் நீ தந்த அன்பு
என்றும் எங்கள் இதயங்களில் நிறைந்தே இருக்கும்.

கண்ணீர் துடைக்க நீ இல்லை,
ஆனால் நீ கற்றுத் தந்த தைரியம்
இன்றும் எங்களை வழிநடத்துகிறது.

மறக்க முடியாத உன் பாசம்,
அழியாத உன் நினைவுகள்,
என்றும் எங்கள் வாழ்வின் ஒளியாக இருக்கும்.

உன் முதல் ஆண்டு நினைவு நாளில்
கண்ணீருடன் உன்னை நினைத்து,
அன்புடனும் நன்றியுடனும்
என்றும் உன்னை இதயத்தில் சுமக்கிறோம்.

"உடலால் நீ பிரிந்தாலும்,
நினைவால் நீ என்றும் எங்களோடு வாழ்கிறாய் அம்மா.

(cs.61803) (N-1)


குடும்பத்தினர்

# வருணை ஜயசுந்தரவுக்கு சி.ஐ.டி.யினர் அழைப்பு

கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார். 'கெஹெல்பத்தர பத்மே' என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்கும்பல் தலைவருடன் தொடர்புகளைப் பேணியதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பான சம்பவம் குறித்து வாக்குமூலம் ஒன்றை ப் பதிவு செய்வதற்காகவே அவர் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளார்.

(ச-இ)

# இதய அஞ்சலி



பிறப்பு
22 . 07 . 1948

இறப்பு
02 . 07 . 2026

கொக்குவிலை வசிப்பிடமாகவும் எமது வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் ஆர்வலரும் வளர்மதியின் வளர்ச்சியில் பெரும் அக்கறையுடன் பல உதவிகளை புரிந்து வருகின்றவருமாகிய **திரு. கருணானந்தமூர்த்தி சுகந்தன் (கொழும்பு எசன்ஸ் ஹவுஸ் உரிமையாளர்)** அவர்களின் தந்தையார்

## திரு. கந்தையா கருணானந்தமூர்த்தி

(நந்தாவில், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்)

அவர்கள் 02.07.2026 இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரிற்கு எமது இறுதி இதய அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அன்னாரின் பிரிவால் துயருற்றிரும்**

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகமும் சனசமூக நிலையமும், வளர்மதி நிறைவாழ்வகம், வளர்மதி மகளிர் அமைப்பு.**

(cs 61801 (N.1)

# மரண அறிவித்தல்



பிறப்பு
19 . 11 . 1953

இறப்பு
30 . 06 . 2026

## சுபத்திரா கிங்ஸ்லி சத்தியநாதன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுபத்திரா கிங்ஸ்லி சத்தியநாதன் அவர்கள் திருநெல்வேலி இல்லத்தில் கடந்த 30.06.2026 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாதேவன் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், கிங்ஸ்லி சத்தியநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும், பெலிசியா பிரிந்தினி (UK), கிரிஸ்ரி பிராசாந் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வனஜா மற்றும் விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிறிஸ்ரோ (UK), தேவகுமாரி (UK) ஆகியோரின் மாமியாரும், ரிஷோன், சேயோன், கிரிஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (05.06.2026) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4.00 மணியளவில் கோப்பாய் இராச வீதியிலுள்ள உரும்பிராய் இம்மானுவேல் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 8748 267**
**074 9106 595**

**120/1, ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி.**

(cs.61804) N-1

# மரண அறிவித்தல்



பிறப்பு
05 . 07 . 1945

மறைவு
01 . 07 . 2026

## செல்லையா பொன்னுத்துறை

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதி அச்சுவேலி தெற்கு அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பொன்னுத்துறை அவர்கள் கடந்த (01.07.2026) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னு தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான இளையன் - பொன்னு தம்தியரின் மருமகனும், காலஞ்சென்ற சின்னத்தங்கம் அவர்களின் அன்புக் கணவரும், ஜங்கரன், பரணீகரன் , கிரிசர, கிருபானந்தி, யசீகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், உமாரதி, லதா, தில்லைநாதன், வசந்தகுமார், தனோயா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வினுஷன், துர்க்காயினி, சிரேசா, கபிஸணா, விகாஷ், டக்ஷா கிசோன், மிதுஷி, யனிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (05.07.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பலாலி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 61807) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## Vacancy Advertisement for Geographical Information System (GIS) Specialist

The HALO Trust is a non-political and non-religious international NGO, registered in the United Kingdom as a charity under registration numbers 1001813 and SCO37870, and in the United States as a 501(c)(3) Not-for-Profit organisation. HALO specialises in the removal of explosive remnants of war and the clearance of landmines, helping communities recover safely and rebuild their lives. Globally, HALO employs almost 10,000 staff across 28 countries, with all programmes supported by HALO's headquarters in the United Kingdom. HALO began operations in Sri Lanka in 2002, initially undertaking an extensive minefield survey. This survey provided much of the baseline minefield data now held in the national database and supported the establishment of HALO's large-scale humanitarian mine clearance programme in the country.

Currently, HALO Sri Lanka employs under 600 local staff, including skilled survey teams, Explosive Ordnance Disposal teams, manual and mechanical mine clearance teams, and support staff. HALO Sri Lanka's programme headquarters is based in Mullaitivu, with operations focused across the Jaffna, Kilinochchi and Mullaitivu Districts. The programme continues to support Sri Lanka's national mine action goals by helping affected communities safely return to their land and rebuild their lives. HALO remains committed to creating a safe, inclusive and professional working environment, while supporting Sri Lanka's national mine action goals and helping affected communities return safely to their land

### Duties and responsibilities:

The GIS Specialist is primarily responsible for the management, maintenance and analysis of programme operational data, and the production of accurate, informative mapping to assist humanitarian demining operations. Solid information management is fundamental to HALO mine action operations – the GIS Specialist is the means by which HALO's operational activities are properly recorded, processed, analyzed and disseminated. The GIS Specialist will, after training, be expected to fully grasp the range of HALO mine action operational activities and the relevant data and in formation produced. The GIS Specialist reports directly to the IM/GIS Manager.

### The GIS Specialist is responsible for:

- Support field operations with training, data, maps and GIS tools.
- Support field teams with the setup and use of ArcGIS Survey123, ArcGIS Field Maps, and Trimble GNSS receivers.
- Conduct the QA & QC of spatial data coming from the field to ensure the data is fit for the purpose.
- Produce GIS mapping products for programme management and reporting.
- Maintain GIS web maps and feature services and make suggestions for improvements.
- Maintain Survey123 and ArcGIS Field Maps offline maps for use in the field by operations teams.
- Prepare weekly/monthly reports.
- Prepare and maintain clearance progress maps, forecasting tools, task trackers, and hosted tables on the GIS portal.
- Liaise with internal and external stakeholders, including senior management, the National Mine Action Centre (NMAC), and SLA military personnel.

Perform any other related GIS duties as required.

### Education Requirement:

A bachelor's degree or diploma in GIS, Geography, Geomatics, Surveying, Environmental Science, IT, Computer Science, Engineering, or a related field is required. Additional GIS-related training or certification will be an advantage.

Experience Minimum 2-3 years' experience in GIS,spatial analysis or information management. Experience with humanitarian or NGO projects is desirable.

Language English (Good written and spoken)

Interested candidates must submit their CV (2 pages maximum) and a cover letter (one page maximum) to the address or e-mail below. In addition, CVs must include at least two professional references. Shortlisted candidate will be invited to interview.

All applications must be submitted by 15 July 2026. Please note that only shortlisted applicants will be contacted.

For further information, please contact 021 228 5466.

HALO encourages applications from individuals of all backgrounds. However, due to the specific requirements of this position, **only applications from women candidates will be considered.**

**HR Department**
**The HALO Trust,**
**450 Thirunagar West, Kilinochch Email: hr@halosrilanka.org**

---

**Recovery Officer Vacancy**
அறவீட்டு அலுவலர்
வடக்கு, கிழக்கு & நாடு பூராவும்

முழுநேரம் / பகுதி நேரம்
ஆண் / பெண்

- வயது - 25-55
- க.பொ.த. சா / தரம்
- மோட்டார் சைக்கிள் இருக்க வேண்டும்

**074 375 2682**
**074 033 9568**
**074 253 7694**

(cr.47780) N

மாத வருமானம் LKR 100,000+
(செயற்பாட்டின் அடிப்படையில்)

---

## பெயர் மாற்றம்

6ம் வட்டாரம் கும்புறுப்பிட்டி
திருகோணமலையைச் சேர்ந்த
**பீற்றர் மேரி அனுசா** ஆகிய நான் எனது பெயரை
**பீற்றர் அனுரா** என மாற்றம் செய்கின்றேன் என
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**பீற்றர் அனுரா**

(CS) N

---

## பொருட்கள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Damro Triple Layer மெத்தைகள், Curtains, Towels, தேக்கு மர கதிரை செட், மண் சட்டி Buffet Set, மேசைகள், Burner,Cup & Saucer, Plates, Cutleries, இருக்கை Cushions, Picture Frames, என்பன மலிவான விலையில் விற்பனைக்குண்டு.

(CS61802) N

தொடர்புகளுக்கு:
**077 260 2106 (யாழ்ப்பாணம்)**

---

## மரண அறிவித்தல்

பிறப்பு
09 . 03 . 1946



இறப்பு
02 . 07 . 2026

### மகேஸ்வரலிங்கம் சீதாதேவி

ஏழாலை தெற்கு, களபாவோடையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மகேஸ்வரலிங்கம் சீதாதேவி அவர்கள் கடந்த 02.07.2026 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் மகேஸ்வரலிங்கத்தின் அன்புத் துணைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2026) ஞாயிற்றுக் கிழமை அன்று முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனிகள்.**

**ஏழாலை தெற்கு,**
**களபாவோடை.** (cs.61805) N

---

## நெல் கொள்வனவுக்கு நியாய விலை தேவை

வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

நெல் விவசாயிகளுக்கு அவர்களின் உற்பத்திச் செலவுகளை ஈடுசெய்யக்கூடிய நியாயமான கொள்வனவு விலையை வழங்குவதற்காக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவருவதில் நாட்டின் விவசாய சமூகம் மிக முக்கியமான பங்காற்றியது. பெரும்பாலான விவசாயிகள் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியிருந்த போதிலும், இன்று தங்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்குக் கூட தீர்வு கிடைக்காததால் அவர்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.நெல்விவசாயிகள் தங்களதுவிளைச்சலுக்கு ஒரு கிலோவிற்கு 130 ரூபா அல்லது குறைந்தபட்சம் 120 ரூபா வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். விவசாயிகளுக்கு முன்பு கிடைத்த உரமானியங்கள் மற்றும் இதர அரசாங்க உதவிகள் தற்போது குறைக்கப்பட்டுள்ளன. கோரப்படும் நியாயமான விலை கிடைக்காவிட்டால், உற்பத்திச் செலவுகளை ஈடுசெய்து விவசாயத்தை மேலும் தொடரமுடியாத அவலநிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுவர்.எனவே அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் உடனடித் தீர்வுகளை வழங்குவது தற்போதைய அரசாங்கத்தின் தலையாய பொறுப்பாகும்– என்றார். (ச–இ)

---

## Regular Maintenance & Repairs of Air Conditioners Regional Directorate of Health Services, Jaffna

Addendum

Regional Directorate of Health Services, Jaffna Advertised invitation for Bid for Regular Maintenance & Repair of Air Conditioner on 01.07.2026

1. A complete set of Procurement Documents (comprised lot A, Lot B, Lot C, Lot D,Lot E) in English language may be purchased by interested bidders **upon payment of non- refundable fee 3,000.00** The method of payment shall be made in cash.

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Services,Jaffna**

(cr.47788) N

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# 100 நாடுகளின் தலைவர்களுடன் கமேனிக்கு விடைபெறுதல் நிகழ்வு

தெஹ்ரான்,ஜூலை 4

**கடந்த பெப்ரவரி 28 அன்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் 6 நாள் இறுதிச் சடங்குகள் இன்று முதல் தொடங்கவுள்ளன. ஈரான் இஸ்லாமியக் குடியரசின் உச்ச தலைவராக கோலோச்சிய அயதுல்லா அலி கமேனியின் உடல், தலைநகர் தெஹ்ரானில் உள்ள 'இமாம் கொமேனி கிராண்ட் மஸல்லா' வளாகத்துக்கு அஞ்சலிக்காகக் கொண்டு வரப்பட்டுள்ளது.**

இறுதி ஊர்வல நிகழ்வுகள் குறித்து ஈரானிய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித்தளம் தெரிவித்துள்ளதாவது:
எங்கள் நாட்டின் மறைந்த உச்ச தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த, உலகெங்கிலும் உள்ள சுமார் 100 நாடுகளிலிருந்து முக்கியமான விருந்தினர்கள் தெஹ்ரான் வரவுள்ளனர். இதில் பல்வேறு நாடுகளின் அரசியல் தலைவர்கள், நாட்டுத் தலைவர்கள் நாடாளுமன்றச் சபாநாயகர்கள், வெளியுறவு அமைச்சர்கள் அல்லது அந்தந்த அரசாங்கங்களின் சிறப்புப் பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள். ஜூலை 8ஆம் திகதி வரை ஈரானின் முக்கியமான நகரங்கள் ஊடாகப் பிரம்மாண்ட இறுதி ஊர்வலங்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள் ளது. இறுதியாக ஜூலை 9 அன்று அவரது சொந்த ஊரான மஷ்ஹாரில் உள்ள புகழ்பெற்ற 'இமாம் ரெசா' நினைவிடத்தில் உடல் அடக்கம் செய்யப்படவுள்ளது - என்றுள்ளது. இதே வேளை அமெரிக்கா தனது 250ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்குத் தயாராகும் அதே ஜூலை 4 அன்று கொல்லப்பட்ட ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் நல்லடக்க நிகழ்வுகள் 2 கோடி மக்கள் அலையுடன் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(ச-இ)

## நல்லூர்க் கந்தன் [திருமண சேவை]

எம்மிடம் சகல மணமக்களுக்குமான வரன்கள் உண்டு. உள்நாடு வெளிநாடு பிறைவேட் எந்த தொழில் ஆயினும் நீங்கள் விரும்பியவாறு விரைவாக ஒழுங்கு செய்து தரப்படும்.

குறிப்பு: (ஆண் V கனடா சிற்றிசன் யாழ் வருவார். 1987ம் ஆண்டு மூலம் நட்சத்திரம். சூரியன் செவ்வாய் குற்றம் இல்லா இடத்தில் இருப்பதால் சூரியன் செவ்வாய் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு: வி.ஜெயந்தி 077 9733 183**

(CS 32092) A

## INVITATION FOR BIDS (IFB)
## IFB No: 2026/06
## VELANAI PRADESHIYA SABHA, VANGALAVADY JUNCTION, VELANAI.

1. The Chairman, Divisional Procurement Committee, on behalf of the Velanai Pradeshiya Sabha Invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026-07-03 To 2026-07-20 during 09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506) **from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. **Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai.on or before 21.07.2026, 10.30** a.m Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall,** Velanai Pradeshiya Sabha, Vangala vady junction, Velanai. Commencing on **13.07.2026 at 11.00 a.m as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| Document Issuing/ Purchasing Period | From 2026-07-06 To 2026-07-20 |
| Pre-Bid Conference | At 11.00 A.M on 2026-07-13 |
| Closing and Opening of Bids | At 10.30 A.M on 2026-07-21 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period |
| NP/14/41(18)/02/ Tourism/01/2026 | Establishment of Chain-Link to circumscribe access from the road side, establishment of entrance arch, extension of steps along the road | 7.958 | 105 | C8, C7 & C6 in Building Construction | 3000.00 | 119,500.00 | 03.11.2026 |
| NP/14/41(18)/02/ Per.Grants/01/2026 | Construction of 'Island South' Shopping Complex at Vangalavady | 8.094 | 105 | C8, C7 & C6 in Building Construction | 3000.00 | 121,500.00 | 03.11.2026 |

Chairman,
Divisional Procurement Committee (DPC)
Velanai Pradeshiya Sabha,
Vangalavady junction, Velanai.
04.07.2026

# அலி கமேனியின் இறுதிச்சடங்கில் புதிய உச்ச தலைவர் பங்கேற்கார்

## உறுதிப்படுத்தியது ஈரான்

தெஹ்ரான்,ஜூலை 4

படுகொலை செய்யப்பட்ட ஈரானின் முன்னாள் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் இறுதிச்சடங்கில் அவரது மகனான புதிய உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி பங்கேற்க மாட்டார் என ஈரான் உறுதிப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து ஈரானிய உச்ச தலைவரின் பிரதிநிதி அயதுல்லா ஹக்கீம் இலாஹி தெரிவிக்கையில்,

புதிய உச்சத் தலைவர் மொஜ்தபா கமேனி, தனது தந்தையின் இறுதிச்சடங்கில் நேரில் கலந்து கொண்டு மக்களைச் சந்திக்கவும், அவர்களோடு இணைந்து துக்கத்தைப் பகிர்ந்துகொள்ளவும் பெரிதும் விரும்புகிறார்.

ஆனால், தற்போதைய அசாதாரணச் சூழலில் அவருக்குப் பாதுகாப்பு வழங்குவது மிகக் கடினமானது மற்றும் ஆபத்தானது எனப் பாதுகாப்புப் படையினர் கருதுகின்றனர்.

எனவே, பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் கருத்திற்கொண்டு அவர் இந்தப் பொது நிகழ்வுகளில் பங்கேற்கக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை ஈரானின் புதிய உச்ச தலைவராக மொஜ்தபா கமேனி அறிவிக்கப்பட்ட போதிலும், கடந்த பெப்ரவரி மாத இறுதிக்குப் பிறகு அவர் இதுவரை ஒருமுறை கூட பொது வெளியிலோ அல்லது காணொலி பதிவுகளிலோ தோன்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மகிழங்குளத்தில் 80 ஏக்கர் காடு ஆக்கிரமிப்பு வனவளத்திணைக்கள அதிகாரிகளும் துணை

## தடுக்கக் கோருகிறார் ஐங்கரநேசன்

**வவுனியா, ஜூலை 4**

**ஓமந்தை பாலமோட்டை வீதியில் அமைந்துள்ள மாதர்பணிக்க மகிழங்குளம் பகுதியில் 80 ஏக்கருக்கும் அதிகமான அடர்ந்த காடு, தனிநபர் ஒருவரால் சட்டவிரோதமான முறையில் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. அரச காணிகளைக் கூறு போட்டு விற்பனை செய்யும் நோக்கில், இடம்பெறும் இந்த வனக்கொள்ளைக்கு வனவளத் திணைக்கள அதிகாரிகளும் துணை போகின்றனர். எனவே அரசாங்கம் உடனடியாக இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வறண்ட வலயமான வவுனியா மாவட்டத்தின் விவசாயமும், குடிநீரும் முற்றிலும் பருவகால மழையையும், மழைநீரைச்சேகரிக்கும் குளங்களையும், நிலத்தடி நீரையும் நம்பியே உள்ளன. மாதர்பணிக்க மகிழங்குளம் போன்ற காட்டுப் பகுதிகள்தான் இயற்கை நீரேந்துப் பகுதிகளாகச் செயற்பட்டு நிலத்தடி நீர்மட்டத்தைப் பேணுகின்றன. தற்போது இந்தப் பகுதியில் 80 ஏக்கருக்கும் மேலான காடுகள் அழிக்கப்பட்டுள்ளதால், ஓமந்தை, பாலமோட்டை மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுவகின்றது.

இங்கு மிக மோசமான குடிநீர்ப் பற்றாக்குறை மற்றும் வறட்சி ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. வன்னி மாவட்டத்தின் உலர்வலயக் காடுகள் அரிய வகை மரங்களினதும் வன விலங்குகளினதும், இயற்கை வாழ்விடமாக உள்ளன.

வவுனியாவில் காடுகள் அழிக்கப்படுவதால், அண்மைக்காலமாக வவுனியா ஹொறவப் பொத்தானை வீதி மற்றும் ஓமந்தைப் பகுதிகளில் மனித-யானை மோதல்கள் பன்மடங்கு அதிகரித்துள்ளன. காடுகளை இழந்து உணவுக்கும், நீருக்கும் தவிக்கும் காட்டு யானைகள் கிராமங்களுக்குள் புகுந்து மக்களின் பயிர்களைச் சேதப்படுத்துவதோடு, உயிர்களையும் பலியெடுத்து வருகின்றன.

இப்போது இந்த 80 ஏக்கர்களையும் தாண்டி நிகழும் காடழிப்பு அந்தப் பகுதி மக்களின் உயிருக்கும், பயிர்ச்செய்கைக்கும் மென்மேலும் ஆபத்தை விளைவிப்பதாகவே அமைந்துள்ளது. நாடாளுமன்றில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் தேசிய சுற்றுச்சூழல் திருத்தச்சட்டம் அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காடழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராகக் கடுமையான தண்டனைகளை இந்த அரசு கொண்டுவந்துள்ள சூழலில், அதற்குச் சவால் விடுவது போல் வவுனியாவில் காடழிப்புத் தடையின்றி அரங்கேறி வருகின்றது.

சுற்றுச்சூழல் திருத்தச் சட்டத்தின் விதிகளுக்கு அமைய காடழிப்பை மேற்கொண்டு வருபவர் மீதும், அதற்குத் துணையாக உள்ள வனவளத் திணைக்கள அதிகாரிகள் மீதும் உடனடியாகக் கடுமையான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்-என்றுள்ளது. (க-66)



# நல்லை ஆதீனத்தில் ஆய்வுக்கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 4

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், நல்லூர்ப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் தேவாரப் பண்ணிசைச் சிறப்பு ஆய்வுக்கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நடைபெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அனிருத்தனன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், ஆசியுரையை திருச்சி தருமை ஆதீன முனைவர் ஸ்ரீமத் மௌன திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகள் நிகழ்த்துவார். இதில் வளவாளராக தருமை ஆதீன தேவாரப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் கலாநிதி திருத்தணி சுவாமி நாதன் ஓதுவார் கலந்துகொள்வார். (க)


## மரண அறிவித்தல்

தோற்றம்
19
02
1958



மறைவு
01
07
2026

### நகுலேஸ்வரி இரத்தினகுமார்

விக்கினேஸ்வரா வீதி, இணுவிலை பிறப்பிடமாகவும் தற்போதைய வதிடமாகவும் மற்றும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த நகுலேஸ்வரி இரத்தினகுமார் அவர்கள் கடந்த 01.07.2026 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இராசமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அரசரத்தினம் - இராசலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், இரத்தினகுமார் அவர்களின் அன்பு மனைவியும், நீதன், ராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகரட்ணம் மற்றும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், பத்மாவதி, பவாநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மனோரஞ்சினி, பேபி சரோஜினி, ராஜினி, வரதகுமார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.07.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இணுவில் தெற்கு,இணுவில்.

தொடர்புகளுக்கு:
077 4349 241

தகவல்:
குடும்பத்தினர்

(CS32089)A

## மரண அறிவித்தல்

மலர்வு
25
05
1936



உதிர்வு
29
06
2026

### நடராஜா கனகேஸ்வரி

(உரிமையாளர் ரதி வாச் வேக்ஸ்)

இல.60, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், கடையிற்சுவாமியார் கோவிலடி நீராவியடியை பிறப்பிடமாகவும் "ரதிபவனம்" இல.06, 2ம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா கனகேஸ்வரி அவர்கள் கடந்த 29.06.2026 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு சின்னத்தங்கச்சி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற மருதப்பு விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மருதப்பு நடராஜா (ரதி வாச் வேக்ஸ், ஸ்ரான்லி பேர்னிச்சர்ஸ்) இன் ஸ்தாபகர் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற மனோன்மணி, கனகரட்ணம், தங்கம்மா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற வள்ளியம்மை, செல்வரத்தினம், தர்மரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், இராஜரதி, இராஜகுலசிங்கம் (காலஞ்சென்றவர்), இராஜகுலேந்திரன், இராஜரஜனி, இராஜசேகரன், இராஜசிறீதரன், இராஜசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr.சிவஞானம், சுசீலாதேவி (காலஞ்சென்றவர்), பேரின்பநாயகி, பரமானந்தம், கலைச்செல்வி, விஜயகுமாரி, வசந்தி ஆகியோரின் மாமியாரும், லவன், கொனி, சேந்தன், ஆர்த்தி, இராஜபிரசாத், சுபிகா, நிரோஜன், வினோதினி, கோபிஜனனன், விபிதா, கரிண்யா, கரிந்திரா, புனிஸா, சகானா, கோவட்சன், வினோதன், சுகன்ஜா, வினோதினி, தினேஷ், அனோபன், சாகித்யகுமாரி, விதுசன், மதுரா ஆகியோரின் பேர்த்தியாரும், சூரியன், மிலன், ஆரியா, அர்ஜீன், வீருண், அக்சயன், ஓசனா, லக்சன், விஷ்வா, கைரன், அகரன், ஆர்த்தி, நியாஸ், ரதீஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (05.07.2026) ஞாயிற்றுக் கிழமை காலை இடம்பெற்று, மு.ப. 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்பு: 077 855 8845 நிரோஜன் (பேரன்)
0041765211038 (மகள் ராயு) சுவிஸ்

(CS 32088)A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லலித்,...

எடுக்கப்பட்டது. இதன்போது, கொழும்பு நீதவான் நீதிமன்றத்துடன் தொடர்பு கொண்டு, நிகழ்நிலைச் சாட்சியப் பதிவுக்குப் பொருத்தமான திகதியைத் தீர்மானிப்பதற்கும், நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களின் தேவைகள் கருதியும் இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாண நகரில் நடத்த திட்டமிடப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்கால் பகுதியில் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டனர்.

இதையடுத்து, லலித், குகன் ஆகியயோரின் உறவினர்களால் ஆட்கொணர்வு மனு கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணைகளின் போது கடந்த 2017ஆம் ஆண்டு மனுவின் சாட்சியாளர்கள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்சவின் பெயர் இணைக்கப்பட்டது.

இதையடுத்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளை தொடர்ந்து, கோத்தபாய ராஜபக்ச மன்றில் தோன்றி சாட்சியமளிக்குமாறு மன்று உத்தரவிட்டது. பாதுகாப்பு காரணங்களால் தன்னால் யாழ்ப்பாணம் வர முடியாது என தொடர்ச்சியாக கோத்தபாய ராஜபக்ச தெரிவித்து வந்தார். அதனையடுத்து நீண்ட இழுபறிக்குப் பின்னர் அவர் நிகழ்நிலை ஊடாகச் சாட்சியமளிக்க நீதிமன்றம் அண்மையில் அனுமதியளித்தது.

கோத்தாபய தனது வீட்டில் இருந்து சாட்சியமளிக்க முடியாது எனவும், கொழும்பிலுள்ள பிரதான நீதிமன்றில் ஏதாவது ஒன்றில் நேரில் தோன்றி நீதவான் முன்னிலையில் நிகழ்நிலை ஊடாக சாட்சியம் அளிக்கவேண்டும் என்றும் மன்று நிபந்தனை விதித்தது. இந்தநிலையில் நேற்று வெள்ளிக்கிழமை குறித்த வழக்கு யாழ். நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கொழும்பு நீதவான் நீதிமன்றத்துடன் தொடர்பு கொண்டு, நிகழ்நிலைச் சாட்சியப் பதிவுக்குப் பொருத்தமான திகதியைத் தீர்மானிப்பதற்கும், நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களின் தேவைகள் கருதியும் இந்த வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## ரூ.100 கோடி...

சாட்டுத் தொடர்பில் மீளவும் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

மைத்திரி ரணில் ஆட்சிக்காலத்தில் இந்த வழக்குத் தொடர்பில் பெரியளவில் பேசப்பட்டது. இது தொடர்பில் சாட்சியங்கள் பெறப்பட்ட போதிலும் அப்போதைய அரசாங்கம் விசாரணைகளைக் கிடப்பில் போட்டிருந்தது. இவ்வாறான நிலையில், இலஞ்ச ஊழலுக்கு எதிரான பிரஜைகள் முன்னணியின் தலைவர் ஜாமுனி காமந்த துசார வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் மீள ஆரம்பமாகியுள்ளன.

இவ்வாறாக மோசடியாகப் பெறப்பட்ட பணத்தில், நாமல் ராஜபக்ச மற்றும் யோஷித ராஜபக்சவின் பெயர்களில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் முறைப்பாட்டாளர் தரப்பு குறிப்பிட்டுள்ளது. (அ-ம)

## வசந்த...

மகன் யோஷித ராஜபக்சவின் முறையற்ற கடற்படை நியமனம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணையின் தொடர்ச்சியாகவே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. யோஷித ராஜபக்சவை கடற்படையில் இணைத்துக் கொள்வதற்காக, நிறைவேற்று அதிகாரிகளுக்கான நிலையான ஆட்சேர்ப்பு தகைமைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், யோஷித ராஜபக்ச பிரிட்டனின் கடற்படைக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்காக பொதுப்பணம் தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் புலனாய்வாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ-ம)

## காணிகளைச்...

மணியம் சுரேன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பச்சிலைப்பள்ளி முகாவில் கிராம அலுவலர் பிரிவில் உள்ள 25.73 ஏக்கர் தனியார் காணியை 4ஆவது மின் மற்றும் இயந்திரப் பொறியியல் படையணிக்காகவும், இயக்கச்சி எரிபொருள் நிலையத்துக்கு அருகில் உள்ள 12 ஏக்கர் தனியார் காணியை 5ஆவது பொறியியல் இராணுவ முகாமுக்காகவும் சுவீக்கரிப்பதற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதி வழங்கப் போவதில்லை. அரசாங்கம் ஏற்கனவே வாக்குறுதி வழங்கியமைக்கு அமைய மக்களின் காணிகளை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மக்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சிகளை நாங்கள் தீர்க்கமாக எதிர்ப்போம் - என்றுள்ளது. (அ-ம-55)

## ஆளுநரின்...

வர் காண்டீபன் தொடுத்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மனுதாரரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையாகினார். அவர் முன்வைத்த சமர்ப்பணங்களை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் ஆளுநரின் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஜூலை மாதம் 15ஆம் திகதிவரை தடை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வழக்குத் தொடர்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:-

வடமாகாண ஆளுநர் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வவுனியா மாநகர முதல்வர் காண்டீபனை பதவியில் இருந்து நீக்கினார். இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக எழுத்தாணை மனுவொன்று வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இன்று அது விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இந்த வழக்குத் தொடர்பான அறிவித்தல் பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் இந்த வழக்குக்குச் சமுகமளிக்கவில்லை.

இந்த மனுவில் காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பாகவும், மனுதாரர் சார்பில் கூறப்பட்ட சமர்[illegible] தொடர்பாகவும் மன்று திருப்தியடைந்து எதிர்மனுதாரருக்கு அறிவித்தல் சேர்க்கும் படியான ஒரு கட்டளையை நியமித்திருக்கிறது.

அத்துடன் இந்த மனுவிலே மூன்று இடைக்கால நிவாரணங்களையும் நாம் கோரியிருந்தோம். காண்டீபனை முதல்வர் பதவியிலும் அல்லது உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்குகின்ற குறித்த வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்தும் படியாக நாம் கேட்டிருந்தோம். அது இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது.

இரண்டாவது அந்த வர்த்தமானியின் அடிப்படையில் எதிர் மனுதாரர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்ற தடையுத்தரவும் வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாவதாக காண்டீபனை பிரதியீடு செய்கின்ற வகையில் இன்னொரு முதல்வரை தெரிவுசெய்வதற்கோ நியமிப்பதற்கோ அல்லது உறுப்பினரை தெரிவு செய்வதற்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்கின்ற தடை உத்தரவையும் கோரியிருந்த நிலையில், அதுவும் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவுகள் தொடர்பாக வருகின்ற 15ஆம் திகதி எதிர் மனுதாரர்கள் நீதிமன்றில் முன்னிலையாகி தமது நிலைப்பாடுகளை தெரிவிக்கலாம். அதுவரை இந்த உத்தரவுகள் அமுலில் இருக்கும் - என்றார். (அ-ம-110-66-26)

## 70 வீதமான...

நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாட்டுச் சபை, ஜனாதிபதி தலைமையில் நேற்றுக் கூடியது. இதன்போதே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது. அத்துடன், சிறைகளில் நிலவும் நெருக்கடியைக் குறைப்பது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

போதைப்பொருளுக்கு அடிமையானோரை மறுவாழ்வுக்கு உட்படுத்தும் சட்டம் இறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், அது விரைவில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும் எனவும் கூட்டத்தில் கலந்துகொண்ட துறைசார் அதிகாரிகள் தெரிவித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## போதிய...

வடமாகாண ஆளுநரால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் உப தவிசாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதுடன் உறுப்பினர் பதவி வறிதாக்கப்பட்டது. இந்த நிலையில் ஞா.கிஷோரின் பதவி வறிதாக்கப்பட்டமை தொடர்பில் ஆளுநரிடம் மீள்பரிசீலனை செய்யுமாறு கோருதல் தொடர்பில் நேற்று விசேட கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. 18 உறுப்பினர்களைக் கொண்ட அமர்வில் 11 உறுப்பினர்கள் பங்கேற்றாததைத் தொடர்ந்து போதிய கோரமின்றி சபை ஒத்திவைக்கப்பட்டது. (அ-ம-28)

## மாகாணசபைத்...

தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொது மக்களின் தேவைக்கு ஏற்ப செயற்படவில்லை. மக்கள், விவசாயிகள் தொடர்பில் திசைகாட்டி அரசாங்கத்துக்கு அக்கறை இல்லை. மாறாக, வர்த்தக நிறுவனங்களின் நலன்களையே முன்னிலைப்படுத்தி வருகின்றனர். இதன் விளைவாக குறுகிய காலத்தில் அதிகளவு மக்களால் வெறுக்கப்பட்ட அரசாங்கமாக திசைகாட்டி அரசாங்கம் மாறியுள்ளது. [illegible] பக்கம் என்று அறிவதற்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் - என்றார். (அ-ம-இ)

## இன...

தமிழக முதல்வர் விஜயை, தமிழக தலைமைச் செயலக அலுவலகத்தில் தமிழ்த் தேசியப் பேரவையினர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர். இதன்போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த சந்திப்பில் ஈழத்தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கும் அரசியல், மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள், ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை ஒழிக்கப்பட்டுத் தமிழர் தேசத்தின் இறைமையை அங்கீகரிக்கும் சமஷ்டி முறையிலான அரசியமைப்பு உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம், கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணும் நடவடிக்கைகள், இந்தியாவில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகளின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் உள்ளிட்ட பல முக்கியமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து தமிழ்த்தேசியப் பேரவை சார்பாக எழுத்துமூலமான கோரிக்கைக் கடிதம் கையளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியப் பசுமைக் கட்சியின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், ஜனநாயகத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.தவராசா, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஷ், தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான க.சுகாஷ், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கொள்கைப் பரப்புச் செயலாளரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான ந.காண்டீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-ம-66-26)

## எரிவாயு...

இதன்படி 12.5 கிலோகிராம் எரிவாயுக் கொள்கலனின் விலை 300 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 4 ஆயிரத்து 465 ரூபாவும், 5 கிலோகிராம் எரிவாயுக் கொள்கலனின் விலை 118 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக ஆயிரத்து ஆயிரத்து 792 ரூபாவும், 2.3 கிலோகிராம் எரிவாயுக் கொள்கலனின் விலை 55 ரூபாவால் குறைக்கப்பட்டு 835 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது. (அ-ம)

## கிஷோரின்...

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர், தனிநபர் விசாரணை அதிகாரி க.அரியநாயகம், சாவகச்சேரி நகராட்சி மன்றம் செயலாளர் ஆகியோரை எதிர்மனுதாரர்களாகக் கொண்டு வடமாகாண மேல் நீதிமன்றத்தின் யாழ்ப்பாண அமர்வில் நேற்று மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு இடைக்காலக் கட்டளைகளை வழங்குவதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை வடமாகாண மேல் நீதிமன்றின் யாழ்ப்பாண அமர்வில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. (அ-ம-26-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



## வல்லை முத்துமாரி அம்மன் நடனப்போட்டியில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற, அறநெறிப்பாடசாலைகளுக்கு இடையிலான நடனப்போட்டியில் வல்லை முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் முதலாமிடம் பெற்றுள்ளனர். போட்டியில் 5 அறநெறிப் பாடசாலை அணிகள் பங்குபற்றியிருந்த நிலையில், அறநெறிப் பாடசாலை ஆசிரியர் பகீரதி பகீரதன் நெறியாள்கையில், வல்லை முத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

(க-100)


# ஐரோப்பிய சந்தைவாய்ப்புக்கு ஜேர்மனி- இலங்கை ஒப்பந்தம்

கொழும்பு, ஜூலை 4
இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சியை மேலும் வலுப்படுத்தவும், ஏற்றுமதி சார்ந்த சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு சர்வதேச சந்தைவாய்ப்புகளை விரிவுபடுத்தவும் இலங்கை ஏற்றுமதி மேம்பாட்டு வாரியம் மற்றும் ஜேர்மனியின் இறக்குமதி ஊக்குவிப்பு மையம் ஆகியன இணைந்து புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை ஏற்றுமதியாளர்கள் சர்வதேச சந்தைத் தேவைகளை துல்லியமாகப் பூர்த்தி செய்வதற்கும், ஐரோப்பிய சந்தைகளுடன் நிலையான வணிக உறவுகளை ஏற்படுத்துவதற்கும் தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை ஜேர்மனி தொடர்ந்து வழங்கவுள்ளது. இந்த இருதரப்புக் கூட்டுறவின் மூலம் குறிப்பாக, இலங்கையின் இயற்கை மூலப்பொருள் துறையில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு நிறுவனங்களின் உற்பத்தித் திறன் மேம்படுத்தப்படும். அத்துடன், சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளில் அவர்கள் பங்கேற்பதற்கான வாய்ப்புகளையும், உலகளாவிய சந்தை விவரங்களையும் பரிமாறிக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**வேலையாட்கள் தேவை**
சாவகச்சேரியில் அமைந்துள்ள வியாபார நிலையம் ஒன்றிற்கு பொருட்களை விநியோகிப்பதற்கு AD சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். சாவகச்சேரியில் வசிப்பவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
077 398 0145

**வேலையாட்கள் தேவை**
இல.310A, Hospital வீதியில் அமைந்துள்ள வியாபார நிலையத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை.
ஆண்கள் மாத்திரம்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
வயது எல்லை (20-40)
(CS 32090)A
தொடர்புகளுக்கு: 0777 76 35 33

**வேலையாட்கள் தேவை**
இத்தாவில், பளை பிரதேசத்தில் புதிதாக அமையவிருக்கும் உணவகம் ஒன்றிற்கு சமையலாளர் (Chef) மற்றும் சமையல் உதவியாளர் தேவைப்படுகிறது.
அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
(CS 32091) A
தொடர்பு: 076 8035 551



## வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 4
மயிலிட்டி வீரமாணிக்க தேவன் துறை கண்ணகை அம்மன் ஆலயத்தில் புஸ்பக விமான வாகனம் வெள்ளோட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.
ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள நிலையில், கண்ணகைத் தாயவள் கோவலனுடன் புஸ்பக விமானத்தில் விண்ணுலகம் ஏறிய வரலாற்றைப் பிரதிபலிக்கும் வகையில் முதன் முறையாக இம்முறை வசந்த உற்சவம் இடம்பெறவுள்ளது. அதற்காகச் செய்யப்பட்ட புதிய புஸ்பக விமான வாகனம் மாலை 4 மணிக்கு பொங்கல் வழிபாடுகளைத் தொடர்ந்து வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. (க-100)

# இலங்கை-கொரியா இடையே இராணுவ உதவி வலுப்படுத்தல்



கொழும்பு, ஜூலை 4
இலங்கை மற்றும் கொரியாவுக்கிடையிலான இராணுவ ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது சம்பந்தமாகவும், கூட்டு இராணுவப் பயிற்சி சம்பந்தமாகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.
இலங்கைக்கான கொரியாத் தூதுவர் கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தாவை சந்தித்து பேச்சு நடத்தியபோது இந்த விடயம் குறித்துக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது பாதுகாப்பு ஒத்துழைப்பு, இராணுவப் பயிற்சி மற்றும் பரிமாற்றத் திட்டங்கள், திறன் மேம்பாடு மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மை ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் கருத்துகள் பரிமாறப்பட்டன.
இலங்கை முப்படையினருக்கு கொரியாவில் பயிற்சி வாய்ப்பு களை வழங்குதல், பாதுகாப்புத் துறை தொடர்பான சர்வதேசக் கண்காட்சிகள், மற்றும் கூட்டு இராணுவப் பயிற்சிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.
அதேவேளை, கொரியாத் தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை மேலும் விரிவுபடுத்தி, நெருக்கமான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான தமது நாட்டின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தினார். (ச-44)

**காணி விற்பனைக்கு**
**யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்குப் பகுதியில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**
- பலாலி பிரதான வீதியில் இருந்து 150m தூரத்தில் உள்ளது.
- 18 அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நன்னீர் ஊற்று சூழல்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- ஒரு பரப்பின் விலை 55 லட்சம் ரூபாய்

பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணி வரை.

தொடர்புகளுக்கு :- 077 814 7389
077 986 5457
ஜெயம் jeyam.lk

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org